# தாமான் மலூரியில் வணிகர்களின் பொருட்களை மாநகர் மன்றம் பறிமுதல் செய்தது!




கோலாலம்பூர், ஜூலை 11–

தாமான் மலூரி சுற்றுப் பகுதியிலுள்ள வணிகர்கள் விற்கும் பொருட்களைப் பறிமுதல் செய்யும் நடவடிக்கையை கோலாலம்பூர் மாநகர் மன்றம் மேற்கொண்டது.

தித்திவங்சா கிளை அலுவலகம் மற்றும் அமலாக்கத் துறையும் இணைந்து ஜாலான் ஜெஜாக்கா 7 மற்றும் ஜாலான் ஜெஜாக்கா 9 ஆகிய பகுதிகளை உட்படுத்திய வணிகர்களிடம் கடந்த செவ்வாய்க்கிழமை இந்நடவடிக்கையை மேற்கொண்டன.

இதில் 1974 சாலை, வடிகால் மற்றும் கட்டடங்கள் சட்டம், 46(1)(டி) பிரிவின் கீழ் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் மேசைகள், பிளாஸ்டிக் நாற்காலிகள், சக்கர உணவு கடை, கண்ணாடி உணவுக் கடை, இதர வர்த்தகப் பொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட அனைத்தும் ஆவணப் பதிவு செய்து மேல் நடவடிக்கை எடுப்பதற்காக செராஸ், தாமான் மிஹார்ஜாவிலுள்ள மாநகர் மன்றத்தின் பறிமுதல் கிடங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கோலாலம்பூர் கூட்டரசுப் பிரதேசத்தின் 11 நாடாளுமன்றங்களிலும் தொடர்ச்சியான கண்காணிப்பு மற்றும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று ஓர் அறிக்கையில் மாநகர் மன்றம் குறிப்பிட்டது.